# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடமாகாணம்
## பயிற்சிப் பரீட்சை - ஜூன் 2017

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

## வினாத்தாள் - I

6

45 நிமிடம்

சுட்டெண் ..........................................................

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- ✸ உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- ✸ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுங்கள்.
- ✸ இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன.
- ✸ 1 - 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.

The National e-learning Portal for The General Education

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | ஒப்பம் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதெனச் சான்றுப் படுத்துகின்றேன். | V/II/T/ |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரிசீலனையின் மதிப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன். | V/II/T/ |
| கணித பரீட்சகர்<br>மதிப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன் | V/II/T/EMF/ |
| பிரதம பரீட்சகர்<br>மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதெனத் தெரிவிக்கின்றேன் | V/II/T/CH/ |

❖ **1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குச் சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

முதல் உருவிற்குச் சமமான உருவைத் தெரிவு செய்க.

*01.* 

1) 

2) 

3) 


*02.* 


1) 


2) 

3) 

*03.* கீழே தரப்பட்டுள்ள உருக்களில் ஓர் உரு ஏனைய இரு உருக்களிலிருந்தும் வேறுபட்டுள்ளது. அவ் வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.


1) 


2) 

3) 

*04.* தரப்பட்ட சொற்களுக்குப் பொருத்தமான படம் எது?


பொருளாதாரப் பயன் - பலவர்ணம் - அனைத்துமுண்ணி


1) 


2) 

3) 


*05.* கீழே தரப்பட்ட உருக்களில் பாத்திரத்தில் நீர் சரியாக நிற்கும் உருவைத் தெரிவு செய்க.

1) 


2) 


3) 


*06.* வினாக்குறி (?) இடப்பட்ட இடத்தில் வரவேண்டிய எண் யாது?




1. 12
2. 21
3. 61

✧ **பின்வரும் பாடல்களை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

எம்மைப் போன்ற சிறுவர்கள்
களிப்புடனே கல்வி கற்று
ஞானம் பண்பு வளரப்பெற்று
உழைத்திடுவார் நாட்டினுக்கு

எங்கும் எதிலும் ஆசையாய் கற்றல்
மங்காத சுக வாழ்வின் ஆதாரம்
இவ்வுலகில் இதற்கு நிகர் வேறு
எதுவுமில்லை எவர்க்குமே.


07. “ஞானம் பண்பு வளரப் பெற்று” என்பதன் பொருள் யாது?
1) அறிவும் நற்பழக்கவழக்கங்களும் மேம்படுத்தல்.
2) இல்லாத குணங்களைக் காட்டுதல்.
3) அறிவை விட நற்பழக்கவழக்கங்கள் மேம்படுத்தல்.

08. மங்காத சுகவாழ்வின் ஆதாரமாக அமைவது யாது?
1) சிறுவர்கள் 2) ஆசையாய் கற்றல் 3) ஞானமும் பண்பும்

09. 2017ம் ஆண்டு மாசி மாதம் 28ஆந் திகதி செவ்வாய்க்கிழமை எனின், மார்ச் மாதம் 28ந் திகதி என்ன கிழமை?
1) திங்கள் 2) ஞாயிறு 3) செவ்வாய்

10. சதுர வடிவான மரக்கறித் தோட்டமொன்றின் ஒரு பக்க நீளம் 15m ஆகும். 3m இடைவெளியில் தூண்கள் நடப்பட்டுள்ளன எனின் காணியைச் சுற்றி நடுவதற்கு எத்தனை தூண்கள் தேவை?
1) 16 2) 20 3) 24

✧ **11ம், 12ம் வினாக்களில் உள்ள உருக்களில் எண் கோலத்திற்கு ஏற்ப A, B யில் இருக்க வேண்டிய எண்களைத் தெரிவு செய்க.**

11. 

1) 5,5 2) 5,7 3) 7,5




12.

| | | |
|---|---|---|
| 1 | A | 5 |
| 6 | 2 | 7 |
| 8 | 4 | B |

1) 4, 9 2) 3, 9 3) 9, 3


13. ஒருவன் 30km தூரம் பயணம் செய்கின்றான். அதில் $\frac{1}{2}$ பங்கை பேருந்திலும் மிகுதியின் $\frac{2}{3}$ பங்கை புகையிரதத்திலும் எஞ்சிய தூரத்தை சைக்கிளிலும் சென்றான். அவன் சைக்கிளில் சென்ற தூரம் யாது?
1) 5km 2) 4km 3) 3km

14. தரப்பட்ட உருக்களில் 8 செவ்வகங்களைக் கொண்ட உரு எது?

1) 
2) 
3) 

The National e-learning Portal for The General Education


15. படத்திற் காட்டப்பட்டுள்ள செங்கற்களின் மொத்த எண்ணிக்கை யாது?



1) 16

2) 18

3) 21

16. 

தரப்பட்ட உருவானது ஒரே அளவான சிறிய சதுரமுகிக் கட்டைகள் உருவாக்கப்பட்டது. இத் தொகுதியில் எத்தனை சிறிய சதுரமுகிகள் உள்ளன?

1) 21 2) 22 3) 23

17. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்ற பழமொழியின் கருத்து


1) சிறிய மரம் ஒன்றைப் பெரிதானதும் வளைக்க முடியுமா?

2) ஐந்து வயதில் படித்தாலும் ஐம்பது வயதில் படிக்க முடியாது.

3) சிறுவயதில் திருத்த முடியாததை வளர்ந்த பின்னர் திருத்த முடியாது.

18. "இங்கே குளிப்பது ஆபத்தானது" எனக் குளத்தின் முன்னால் எழுதப்பட்டிருந்தது. இது

1) அறிவித்தல் 2) அறிவுறுத்தல் 3) அறிவுரை


19. 


இவ்விரு பாத்திரங்களையும் மாத்திரம் பயன்படுத்தி 4 லீற்றர் நீரைச் சரியாக அளக்க முடியுமா?

1) முடியும் 2) முடியாது

3) விடை அளிப்பதற்கு மேலும் தகவல்கள் தேவை

❖ **கீழே தரப்பட்டுள்ள உருவைக் கருத்திற் கொண்டு 20, 21 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**



20. அருகேயுள்ள உருவில் நிறந் தீட்டப்பட்ட சதுரத்தின் சுற்றளவு 40cm எனின் முழு உருவின் சுற்றளவு யாது?

1) 100cm 2) 120cm 3) 140cm

21. முழு உருவின் பரப்பளவு நிழற்றப்பட்ட உருவின் பரப்பளவின் எத்தனை மடங்கு ஆகும்?

1) 9 மடங்கு 2) 10 மடங்கு 3) 8 மடங்கு

22. வினாடிவினாப் போட்டியில் பங்குபற்றிய குழு ஒன்று தம்மிடையே கைகுலுக்கிக் கொண்டனர். அங்கு 66 கைகுலுக்கள் இடம்பெற்ற போட்டியில் கலந்து கொண்டோர் எத்தனை பேர்?

1) 11 பேர் 2) 12 பேர் 3) 33 பேர்

23. 29 ஆவது ஒலிம்பிக் போட்டி 2008ம் ஆண்டு நடைபெற்றது. 33 ஆவது ஒலிம்பிக் போட்டி எத்தனையாம் ஆண்டு நடைபெறும்?

1) 2020 2) 2026 3) 2024

24. ஷாகித் புத்தகமொன்றில் 26ம் பக்கத்தில் இருந்து 95ம் பக்கம் வரை வாசித்தான். அவன் வாசித்த பக்கங்களின் எண்ணிக்கை யாது?

1) 69 2) 70 3) 71

25. சரியாக எழுதப்பட்ட சொற்களைக் கொண்ட வாக்கியத்தைத் தெரிவு செய்க?

1) இலங்கை நீர்ப்பாசணத் திணைக்களம்
2) இலங்கை நீர்ப்பாசனத் திணைக்கழம்
3) இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களம்

26. எமது விளையாட்டுக் குழுவிலுள்ள எல்லா வீரர்களும் உயரமானவர்கள். பாலேந்திரன் உயரமானவன் எனின் "பாலேந்திரன் எமது விளையாட்டுக் குழுவைச் சேர்ந்தவன்" என்னும் கூற்று

1) சரியானது 2) பிழையானது 3) சரியாகக் கூற முடியாது

27. இப்போது எனக்கு வயது 11 வருடங்கள் எனது தம்பியின் வயது 4 வருடங்கள் ஆகும். இன்னும் எத்தனை வருடங்களில் எனது வயது தம்பியின் வயதின் இருமடங்காக இருக்கும்?

1) 3 வருடங்களில் 2) 4 வருடங்களில் 3) 8 வருடங்களில்

✣ **28, 29 ஆம் வினாக்களில் வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.**

28. 704, 605, 506, 407, 308, ......................... 1) 210 2) 209 3) 409

29. 9876, 8765, 7654, ........................... 1) 6540 2) 7643 3) 6543

30. முகம் பார்க்கும் கண்ணாடியின் முன் பார்க்கும் போது வேறுபட்டுத் தோன்றும் எழுத்துக் கூட்டம் யாது?

1) O, H, I 2) N, P. S 3) A, V, M

✣ **31ம், 32ம் வினாக்களுக்கு இடைவெளிநிரப்பப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**


அன்று வெள்ளிக்கிழமை நாம் சுற்றுலா செல்வதற்காகப் புறப்பட்டு மறுநாள் சனிக்கிழமை 8.00 மணிக்கு நாம் அவ்விடத்தைச் .......△1....... அங்கு சென்ற பின் அவ்வளவு சிரமப்பட்டு நாம் ....△2..... செய்ததன் பயனை உணர்ந்து கொண்டோம்.

31. பந்தியில் △1 ற்கு மிகவும் பொருத்தமான சொல் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

1) சென்றடைந்தோம் 2) சென்றடைவோம் 3) சென்றடைகின்றோம்


32. இப் பந்தியில் △2 ற்கு மிகவும் பொருத்தமான சொல் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

1) போக்குவரத்து 2) பயணம் 3) தாமதம்


33. 


உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை


1) 5      2) 10      3) 9

34. 


இவ் அட்டைத்தாளை மடித்து சதுரமுகியாக்கும் போது தோன்றும் வடிவம் யாது?

1) 


2) 



3) 


35. மாணவன் பாடசாலை எனின், தாதி ..............................

1) சந்தை      2) வங்கி      3) வைத்தியசாலை

36. கப்பல் - மாலுமி எனின் ; ஆகாய விமானம் - ............

1) சாரதி      2) வலவன்      3) மீகாமன்

37. 

இவ்வுருவில் அதிகம் காணப்படுவது எது?

1) முக்கோணி
2) சதுரம்
3) செவ்வகம்

38. இவ்வுரு பற்றிய சரியான கூற்று

1) முக்கோணிகளை விட செவ்வகங்கள் குறைவு
2) சதுரத்தை விட முக்கோணிகள் அதிகம்
3) முக்கோணிகளும் சதுரங்களும் சமன்

39. நாதனின் தந்தை பரமுவின் அண்ணன். நாதனின் தந்தையை பரமுவின் மகள் லதா என்ன முறை சொல்லி அழைப்பாள்?

1) அப்பப்பா      2) பெரியப்பா      3) மாமா

40. ஐந்து ஆடு ஐந்து சாக்குப்புல்லை ஐந்து நாட்களில் சாப்பிடும் ஓர் ஆடு ஒரு சாக்குப் புல்லை எத்தனை நாட்களில் சாப்பிடும்.

1) 25 நாட்கள்      2) 5 நாட்கள்      3) 1 நாள்

(40 x 2 $\frac{1}{2}$ = 100 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
# பயிற்சிப் பரீட்சை 06 இன் விடைகள்

தரம் – 05 **6** வினாத்தாள் – I

| | | | |
|---|---|---|---|
| 1. | 2 | 21. | 2 |
| 2. | 3 | 22. | 2 |
| 3. | 2 | 23. | 3 |
| 4. | 2 | 24. | 2 |
| 5. | 1 | 25. | 3 |
| 6. | 1 | 26. | 3 |
| 7. | 1 | 27. | 1 |
| 8. | 2 | 28. | 2 |
| 9. | 3 | 29. | 3 |
| 10. | 2 | 30. | 2 |
| 11. | 3 | 31. | 1 |
| 12. | 3 | 32. | 2 |
| 13. | 1 | 33. | 1 |
| 14. | 2 | 34. | 1 |
| 15. | 2 | 35. | 3 |
| 16. | 1 | 36. | 2 |
| 17. | 3 | 37. | 3 |
| 18. | 1 | 38. | 3 |
| 19. | 1 | 39. | 2 |
| 20. | 3 | 40. | 2 |

The National e-learning Portal for The General Education